# குதிரைச் சவாரி





# 1. குதிரைச் சவாரி

மாலை நேரம். கடல் காற்று 'ஜில்' என்று வீசிக்கொண்டிருந்தது.

பட்டினத்தில் காசு கொடுக்காமல் வாங்கக்கூடியது அந்தக் காற்று ஒன்றுதானே! ஆகையால், அதை வாங்குவதற்காகக் கடற்கரையை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தான் மோஹன். கடற்கரை மணலில் பாதி தூரங்கூட அவன் போகவில்லை. அதற்குள் தூரத்தில் வந்துகொண்டிருந்த இரண்டு குதிரைகளை அவன் பார்த்துவிட்டான்.

குதிரைகள் இரண்டும் சும்மா வரவில்லை. ஒன்று, ஒரு பையனை முதுகில் ஏற்றிக்கொண்டு வந்தது. மற்றொன்று, ஒரு பெண்ணை ஏற்றிக்கொண்டு வந்தது. 'ஜாம், ஜாம்' என்று அந்தக் குதிரைகள் வருவதைக் கண்டான் மோஹன். அப்போது அவனையும் அறியாமல் அவனுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டது.



இவ்வளவு நேரம் நடந்ததையெல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த மோஹனுக்கு இப்போது தான் விஷயம் விளங்கியது.

“நம்மிடமும் இருபது காசு இருந்தால்......?” என்று எண்ணலானான்.

ஆனால், அவனிடம் அப்போது ஒரு பைசா கூடக் கிடையாது! குதிரைகள் குழந்தைகளை ஏற்றிச் செல்வதையும், திரும்பி வருவதையும் வெகு நேரம் பார்த்துப் பார்த்து ஏங்கிக்கொண்டே நின்றான். சூரியன் மறைந்துவிட்டது கூட அவனுக்குத் தெரியவில்லை.

“என்ன தம்பி, எப்படி இருக்குது சவாரி?” என்று கேட்டுக்கொண்டே முனுசாமி இன்னொரு குதிரையைப் பிடித்துக்கொண்டு நடந்தான்.

“குஷியாயிருக்குது” என்று பல்லைக் காட்டியபடி பதில் சொன்னான் மோஹன்.

சிறிது தூரம் சென்றதும், “ஏன் தம்பி, உன் வீடு எங்கே இருக்குது?” என்று கேட்டான் முனுசாமி.





“ஐயா, மோஹன் என்கிற பையன் இங்குதானே இருக்கிறான்?” என்று அதிகாரத்துடன் கேட்டான் அவன்.

“ஆமாம். என்னப்பா விஷயம்?” என்று கேட்டார் மோஹனுடைய அப்பா.

“என்னவா! என் குதிரைகள் இரண்டையும் அவனிடம் கொடுத்திருந்தேன். இப்போது குதிரைகளையும் காணோம்; அவனையும் காணோம். எங்கே அவன்?”

“என்னப்பா, குதிரையாவது! காணோமாவது! விளையாடுகிறாயா, என்ன?... அது என்ன குதிரை? பொம்மைக் குதிரையா?”

“நானா விளையாடுகிறேன்? நீங்கள் தாம் விளையாடுகிறீர்கள். எங்கே அந்தப் பையன்? கூப்பிட்டுக் கேளுங்கள், யார் விளையாடுவது என்று தெரியும்” – இப்படி ஆத்திரத்துடன் கூறினான் முனுசாமி.